சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. 60 /2017

பெயர்: முருகேசன் பி.வா.சா.1 தேதி **15.04.2026**

பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

1. எங்களது குடும்ப வம்சா வழி பட்டியல் பி.வா.சா. 15
2. பட்டா எண் 1057 க்கு உரிய பட்டா பாஸ் புத்தகம் பி வா.சா.16

வாதியின் வழக்கினை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

முதல் பிரதிவாதி எனது தகப்பனார். வழக்கு தாக்கல் செய்த காலக்கட்டத்தில் எனது தகப்பனார் உயிருடன் இருந்தார். அவரும் நானும் சேர்ந்து தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளோம். வாதியானவர் எங்கள் மீது பதிவு அடைமான பத்திரத்தில் கண்டுள்ள தொகையை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனது தகப்பனாரின் சகோதரி பெயர் சிறும்பாயி. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்த்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது மற்றும் எனது தகப்பனாருடையது. மேற்படி வா.சா.ஆ 1 ஆவணத்தில் ரூ. 2,00,000 கடன் பெற்றுக்கொண்டு மாதம் ஒன்றுக்கு ரூ. 100 க்கு 2 ரூபாய் செலுத்துவதாக காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஒன்றுதான். மேற்படி வா.சா.ஆ 1 ஆவணம் தவறானது என்று கூறி எந்த நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனாரின் சகோதரியான சிறும்பாயி மற்றும் அவரது கணவர் இறந்து போய்விட்டார்கள். மேற்படி சிறும்பாயின் வாரிசு சான்றிதழ் பெறப்படவில்லை என்றால் பெற்று தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. (சாட்சி தற்பொழுது சிறும்பாயின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என கூறுகிறார்.) சிறும்பாயின் வாரிசுகள் யார் என எந்த அமைப்பும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

2.நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொன்ன ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் உண்டா என்றால் இல்லை. சர்வே எண் 226/2 ல் மொத்த விஸ்தீரணம் 96 செண்டில் வடபுறம் 48 செண்ட் என்னுடைய தாத்தா சுக்கிர நாயக்கருக்கு பாத்தியப்பட்டது. தென்புறம் உள்ள 48 செண்ட் சிறும்பாயிக்கு பாத்தியப்பட்டது.

எனது தாத்தா இறந்த பின்னர் எனது தகப்பனார் மற்றும் சிறும்பாயி மட்டுமே வாரிசுதாரர்கள். 1986 UDR ல் சர்வே எண் 226/2 ல் மொத்த விஸ்தீரணம் 96 செண்டுமே சிறும்பாயி பெயரில் பட்டா ஏற்பட்டது. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் எனது தகப்பனாரும் மேற்படி சிறும்பாயிம் வாதிக்கு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் இல்லை. நான் M.sc பட்டதாரி. மேற்படி பி.வா.சா.ஆ 13 ஆவணத்தின் வாயிலாக அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் எனக்கு சரியாக நியாபகம் இல்லை. நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் இரண்டு அடைமான பத்திரம் ஒரு போக்கிய பத்திரம் மேற்படி சொத்து சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என கூறியுள்ளோம் என்றால் சரிதான்., 2003 போக்கியம் 2007 அடைமானம் எழுதிகொடுத்தது சிறும்பாயி. வா.சா-ஆ 1 ஆவணம் 2012 ம் ஆண்டு என்னாலும் எனது தகப்பனாராலும் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ 1 ஆவணத்தின் அடிப்படையில்தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சிறும்பாயி எழுதிக்கொடுத்த ஆவணங்களை பொறுத்து வாதி தனியாக நடவடிக்கை மேற்கொள்வதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள படி தாவா கடன் போக்கிய கடன் இல்லை என்றாலும் அடைமான கடன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை வட்டிக்காக போக்கிய மாக எழுதி கொடுத்து அனுபவிக்க கொடுத்தோம் என கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 ஆவணத்தில் போக்கியம் என்ற வார்த்தையும், சுவாதினம் கொடுத்தோம் என்ற வார்த்தையும் இல்லை என்றால் சரிதான். ஆனால் வாய்மொழியாக சொன்னோம். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ 1 ஆவணத்தில் 2ம் பக்கத்தில் சிறும்பாயி வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சிறும்பாயிக்கும் எங்களுக்கும் பாதி பாகம் வாய்மொழியாக பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். அவ்வாறு வாய்மொழியாக எங்களுக்கு எந்த சொத்து ஒதுக்கப்பட்டதோ அதைதான் வாதிக்கு வா.சா.ஆ 1ஆவணத்தில் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான்.

4. 2007ம் ஆண்டு சிறும்பாயி அம்மாளும் அவருடைய கணவரும் சேர்ந்து வாதிக்கு எழுதிக்கொடுத்த அடைமான பத்திரத்தில் சாட்சி கையொப்பம் இட்டவர் எனது தந்தை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு நான் உட்பட 7 பேர் வாரிசுகள் என்றால் சரிதான்., வா.சா,ஆ 1 ஆவணத்தில் கடன் வாங்கியவர் என்கின்ற கோதாவிலும் முதல் பிரதிவாதியின் வாரிசுகளும் என்கின்ற கோதாவிலும் தனித்தனியாகவும் கூட்டாகவும் வாதிக்கு மேற்படி வா.சா.ஆ 1 ஆவணத்தின் படி தொகையை செலுத்த கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.04.15 17:54:50 +0530

சார்பு நீதிபதி
குளித்தலை.